தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, பிப்ரவரி 15, புதன்கிழமை.

மாசி 4, விபவ—திருவள்ளுவர் ஆண்டு—2020

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்”.

சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக் களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ்: நான் கடந்த சனிக்கிழமை என்னுடைய தொகுதியிலே பஸ்ஸிலே டிராவல் செய்த ஒரு வழக்கறிஞர் சகோதரரை—வழக்கறிஞர் சங்கத்தினுடைய பொது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தது பற்றித்தான் சொல்ல வேண்டுமே தவிர, விளக்கம் சொல்லக்கூடாது.

திரு. மா. சுந்தரதாஸ்: இது முக்கியமான பிரச்சினை. முதல்வருடைய இலாக்காவைச் சேர்ந்தது. என்னுடைய தொகுதியிலே நடந்திருக்கிறது. இதைக்கூடச் சொல்ல முடியாவிட்டால் நான் சட்டமன்றத்திற்கு வந்து என்ன பயன்? வழக்கறிஞர் சகோதரரை வெட்டிக் கொன்றிருக்கிறார்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் அமர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: என்னுடைய தொகுதியிலே மக்களை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைச் சொல்ல முடியா விட்டால் இங்கே நான் எதற்காக வர வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் இதைச் சரியாக எடுத்துக்கொள்ளாவிட்டால் 120 ஆவது விதியை நான் பயன்படுத்த வேண்டியிருக்கும்.

2. கவன ஈர்ப்பு.

சென்னை கண் மருத்துவமனையில் ஜெனரேட்டர் பழுதால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் உள்ள எழும்பூர் அரசினர் கண் மருத்துவமனையில் பொருத்தப்பட்டுள்ள டீசல் ஜெனரேட்டர் செட் சமீபகாலமாக பழுதுற்றுள்ளதால் அம் மருத்துவமனையில் அவசர அறுவை சிகிச்சை போன்ற அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை, எழும்பூர் அரசினர் கண் மருத்துவ மனையில் இயங்கிவரும் இரண்டு ஜெனரேட்டர்களில் ஒன்று 28—8—1988 அன்று பழுதடைந்தது. இந்த ஜெனரேட்டரில் ஏற்பட்ட சில பழுதுகளை செப்பனிடும் பொருட்டு 29—8—88 அன்று பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. விரைவில் பழுது பார்த்துத் தருமாறு பொதுப்பணித்துறையினர் கேட்டுக்கொள்ளப் பட்டனர். மின்சார பராமரிப்பு உதவிப் பொறியாளர் செப்ப

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS